IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.294/2022
DEPOSITION OF WITNESS

பி.வா.சா. 1 சாட்சி பழனி த.பெ.மணிசேர்வை

**Solemnly affirmed and sworn by Thiru.S.Sadhu Siva Subramanian, Additional District Munsif on 03.06.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. தாவாச் சொத்து நிலையூர் 1வது பிட் வருவாய் கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி வருவாய் கிராமத்தில்தான் கூத்தியார்குண்டு நிலையூர் பெரியகண்மாய் அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் சர்வே எண் 45ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சுமார் 11 ஏக்கர் ஆகும். மேற்படி 11 ஏக்கரும் ஆதியில் யார்யாருக்கு பாத்தியப்பட்டது என்பதை குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியாது.

2. மேற்படி 11 ஏக்கர் நிலமும் நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாக யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் செய்துஉசேன் என்பவரின் வாரிசு மூலம் பொது அதிகார ஆவணம் மூலமாக வாங்கி பின்னர் கிரையம் முடித்தோம். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் குறைந்த வருவாய் பணியாளர் ஊழியர் சங்கத்தின் மூலமாக கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி அமைப்பிற்கும், கோடாங்கி கருப்பணன் மற்றும் அவரது மனைவி கருப்பாயி அம்மாளுக்கும் அசல் வழக்கு எண். 287/1964 நடைபெற்றது பற்றி தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. மேற்படி வழக்கு பற்றி வாதி தனது பதிலுரையில் கூறியுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1964ல் நடைபெற்ற வழக்கில் கூட்டுறவு சொசைட்டிக்கு எதிராகவும், கோடாங்கி கருப்பணனுக்கு ஆதரவாகவும் தீர்ப்பு ஏற்பட்டது என்றால் தெரியாது. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் சையூப்மைதீன் என்பவருக்கு எனக்கு பொதுஅதிகாரம் கொடுப்பதற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

4. சையூப்மைதீன் வாரிசுகள் சொசைட்டியில் முறையான அனுமதி பெறாமல் பொது அதிகார ஆவணம் எனக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. சங்கத்தினர் முறையான அனுமதி இல்லாமல் எனக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம் செல்லாது என்பதாலும், நான் எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணமும் செல்லாது என்றால் சரியல்ல.

5. நான் கிரையம் வாங்கிய கிரையச்சொத்திற்கு வடக்கே என்ன உள்ளது என்றால் எனக்கு திசை சரியாக தெரியவில்லை. தாவா சர்வே எண் 45 எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் 45ஆனது 1,2 உட்பிரிவாக பிரிக்கப்பட்டு பின்னர் 45/ 1Aஆனது 45/1A1, 45/1A2 மற்றும் 45/1A3 ஆக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி உட்பிரிவில் 45/1A1என்பது மேற்பகுதியாகவும், 45/1A2 ஆனது நடுப்பகுதியாகவும், 45/1A3 கிழக்குப்பகுதியிலும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. சையூப்மைதீன் எனக்கு எழுதிக்கொடுத்த பொதுஅதிகாரம் சர்வே எண் 45/1A3ல் கட்டுப்பட்டது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய பிறகு கிரைய வாங்கிய இடத்திற்கு பட்டாமாறுதல் செய்ய எந்த

வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேன் என்றால் திருப்பரங்குன்றம் வட்டாட்சியரிடம் மனுக் கொடுத்தேன். மேற்படி மனுவின் அடிப்படையில் ஆவணங்களை கூறாய்வு செய்து கிரையதாரர் எனது மனைவியின் பெயரில் கிரையம் வாங்கிய சொத்திற்கு சர்வே எண் 45/58 என உட்பிரிவு செய்யப்பட்டு எனது மனைவி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி சரியாக தெரியாது.

7. கோடாங்கி கருப்பணன் மகன் கோடாங்கி ஆறுமுகம் மற்றும் அவரது வாரிசுகள் அனைவரும் சேர்ந்து மொக்கமாயன் என்பவருக்கு சர்வே எண் 45/1Aல் கட்டுப்பட்ட 5 ஏக்கர் 69 செண்டில் மேல்புறம் 3 ஏக்கர் 3செண்டுக்கு பொதுஅதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 3ஏக்கர் 3செண்டை மொக்கமாயன் 1முதல் 37 பிளாட்டுகளாக பிரித்து 36 மற்றும் 37வது பிளாட்டுகளை சாலைக்குமார் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

8. மேற்படி சாலைக்குமார் பின்னிட்டு நிர்மலாதேவிக்கு 36, 37 பிளாட்டுகளை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நிர்மலாதேவி தான் கிரையம் வாங்கிய பிளாட்டை பட்டாமாறுதல் கேட்டு திருப்பரங்குன்றம் வட்டாட்சியரிடம் மனுசெய்து வட்டாட்சியர் மேற்படி பிளாட்டுகளை சர்வே எண் 45/59 என உட்பிரிவு செய்து பட்டா வழங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

9. எனது மனைவி கிரையம் வாங்கிய இடத்திற்கு சர்வே எண் 45/58 என உட்பிரிவு செய்து பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், வாதி கிரையம் வாங்கிய சொத்திற்கு சர்வே எண் 45/59 என உட்பிரிவு செய்து பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. புலஎண் 45/58க்கு வடகிழக்கு

பகுதியில் சர்வே எண் 45/50, 45/68, 45/20 உட்பிரிவுகள் அமைந்துள்ளது என்றாலும், வடக்கு பக்கத்தில் சர்வே எண் 45/1A1 மற்றும் கிழக்கு பக்கத்திலும் சர்வே எண் 45/1A1ம் மற்றும் தெற்கு பகுதியிலும் சர்வே எண் 45/1A1 உள்ளது என்றும், மேற்படி 4எல்லைகளுக்குள்தான் என்மனைவி கிரையம் வாங்கிய சொத்து உள்ளது என்றால் சரியல்ல.

10. வாதி கிரையம் வாங்கிய இடத்திற்கு வடக்கு பக்கம் புல எண் 184 அமைந்துள்ளது என்றால் சரியல்ல. கிழக்கு பக்கத்தில் சர்வே எண் 45/1A1 மற்றும் சர்வே எண் 45/52, 45/53 உள்ளது என்றால் சரியல்ல. தெற்கு பக்கத்தில் சர்வே எண் 45/1A1 உள்ளது என்றால் சரியல்ல. மேற்கு பக்கத்தில் சர்வே எண் 45ல் 51 உள்ளது என்றால் சரியல்ல. தாவாச் சொத்து என்பது வேறு எனது மனைவி பெயரில் கிரையம் வாங்கிய சொத்து என்பது வேறு என்றால் சரியல்ல.

11. எனது கிரைய ஆவணத்தின்படி தென்பகுதியில் காணப்பட்டுள்ள பாதை ஸ்தலத்தில் இல்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் நானும், மூர்த்தி என்பவரும் புகார் கொடுத்தோம். மேற்படி புகாரின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். மூர்த்தி என்பவர் வாதி மீது கொடுத்த புகாருக்கான இரசீது மட்டும்தான் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. வாதிகள் அவர்கள் கிரையம் பெற்ற இடத்தில் கட்டுமானம் கட்டக்கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் நான் தொந்தரவு செய்து வந்தேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை பொறுத்து எனக்கும், எனது மனைவிக்கும், என்முன்பாத்தியஸ்தரான மைதீன் என்பவருக்கும் எந்தக்காலத்திலும் உரிமை பாத்தியமோ, அனுபவபாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல.

13. தாவாச் சொத்தை பொறுத்து வாதிதான் கிரையம் பெற்று தனித்த சுவாதீனத்தில் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி கிரையம் பெற்ற பிறகு புதிய சர்வேயர் மூலமாக FN.No.97/2022 மனுவின் அடிப்படையில் அளவீடு செய்து கற்கள் ஊண்டப்பட்டது என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை கிரையம் பெற்ற பிறகு வாதி பெயரில் வருவாய் ஆவணங்களில் பதிவு ஏற்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் அனுபவத்திற்கு நான் இடையூறு செய்யக்கூடாது என தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் பிராதுப்படி தீர்ப்பாக வேண்டியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.06.04 10:38:50 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.